

# சமையலறையில் பாதுகாப்பு

## சமையல் பாதுகாப்பு

- நீங்கள் உணவைப் பொரிக்கும்போது, அவிக்கும்போது, வறுக்கும்போது(grilling) அல்லது broil செய்யும்போது சமையலறைக்குள் இருக்கவும்
- அடுப்பைச் சுற்றிக் குறைந்தது 3 அடி (1 மீற்றர்) தூரத்திற்குள் "பிள்ளைகள்-அற்ற வலயம்" ஒன்றை வைத்திருக்கவும்
- அடுப்புக் கையுறைகள் (oven mitts) அல்லது மரப் பாத்திரங்கள் போன்ற தீப்பிடிக்கக்கூடிய எதையும் உங்கள் அடுப்பின் மேலிருந்து விலக்கி வைக்கவும்.
- சமைக்கும் போது தளர்வான ஆடைகளைத் தவிர்க்கவும். தளர்வான ஆடை சூடேற்கும் பகுதிகளுடன் உரசி, இலகுவில் தீப்பற்றிக் கொள்ளலாம்.

## சிறிய சமையல் தீ ஏற்பட்டால்

- நீங்கள் சமைக்கும்போது எப்போதுமே ஒரு மூடியை அருகில் வைத்திருக்கவும். ஒரு பாத்திரத்தில் (pan) ஒரு சிறிய எண்ணெய்ப் படலத் (grease) தீ ஏற்பட்டால், பாத்திரத்தின் மேல் மூடியால் மூடித் தீயை அணைக்கவும். அடுப்பை அணைக்கவும் பாத்திரத்தை (pan) நகர்த்த வேண்டாம்.
- தீ மீண்டும் உருவாகாமல் தடுப்பதற்கு, பாத்திரம் குளிர்வடையும்வரை மூடியை மூடி வைக்கவும்.
- வெதுப்பியில் (oven) தீ ஏற்பட்டால், சூடாக்குவதை நிறுத்தவும், கதவை மூடி வைத்திருக்கவும்.
- சிறிய தீயைக் கட்டுப்படுத்துவதில் உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால், வெளியே சென்று 9-1-1ஐ அழைக்கவும்.

TORONTO

அழைக்கவும் 3-1-1

# புகைத்தல் மற்றும் வீட்டுத் தீப் பாதுகாப்பு

## புகைத்தல் பாதுகாப்பு

- நீங்கள் புகைபிடித்தால், வெளியே புகைபிடிக்கவும் மற்றும் எச்சரிக்கையாக இருக்கவும்.
- ஆழமான, உறுதியான சாம்பல் தட்டுக்களைப் (ashtrays) பயன்படுத்தவும். சாம்பல் தட்டுகள் அல்லது உலோகக் கான்களை எரியக்கூடிய எந்தவொரு பொருளுக்கும் அப்பால் வைக்கவும்.
- சிகரட்டுகள், தீமூட்டிகள்(lighters), தீப்பெட்டிகள் மற்றும் ஏனைய புகைபிடிப்பவரின் பொருட்களைச் சிறுவர்களுக்கு எட்டாத உயரத்தில், அல்லது ஒரு பூட்டப்பட்ட அலமாரியில வைக்கவும்.
- ஒக்சிஜன் பயன்பாட்டிலிருக்கும்போது புகைபிடிப்பதற்கான எந்தவொரு பாதுகாப்பான முறையும் வீட்டினுள் இல்லை.

## அகற்றுதல்

- சிகரட் கட்டைகள் (butts) மற்றும் சாம்பலை எறிவதற்கு முன்பாக, அவை முற்றாக அணைக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்தவும். புகைபிடிப்பவரின் பொருட்களை ஒருபோதும் நேரடியாகக் குப்பைத் தொட்டியில் போடவேண்டாம்.
- தாவரங்கள் அல்லது இலைகள், தொட்டியிலுள்ள தாவரங்கள் அல்லது வடிவமைக்கப்பட்ட மரங்களுக்குள் (landscaping) சிகரெட்டுகளை எறிய வேண்டாம் - அவை இலகுவில் தீப்பிடிக்கும்.
- பற்றவைத்த சிகரெட்டுகளை ஒருபோதும் பால்கனிகளிலிருந்து எறியவேண்டாம். தண்ணீரில் அல்லது மண்ணில் அவற்றைப் போடவும்.



மேலும் அறிய **www.toronto.ca/fire/prevention**

416-338-9375

TFSPubEd@toronto.ca